# இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை எப்போது முடியும்?

**நேற்றைய தொடர்ச்சி**

இதேபோது, எகிப்து நாட்டுக்கு ஒரு இணையற்ற வீரன் மன்னனானான். மாற்றார் கண்டு அஞ்சக்கூடியவனாக மட்டுமல்ல, மதிக்கக்கூடியவனாகவும், மாவீரனாக மட்டுமல்ல, மதிவாணனாகவும், இருந்தான். சாலாவுடீன் எனும், அந்த மன்னனுடைய ஆற்றலைச் சமாளிக்க வேண்டி பெரும் பொறுப்பை, ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன், ஆகிய மூன்று நாட்டுப் பேரரசர்கள் மேற்கொண்டனர். ஏராளமான படை பலம் ! வீரர் வட்டம் ! சாலாவுடீனைத் தோற்கடிக்கும் பேறு, பிரிட்டிஷ் மன்னன் ரிச்சார்டுக்குக் கிடைத்தது. சாலாவுடீன் தோற்றான் - ஆனால் போர் நின்றுவிடவில்லை; ஜெருசலமும் மீட்கப்படவில்லை. அதற்காகக் கடும் போர் நடந்தது; ரிச்சார்டு பன்முறை முயன்றும், ஜெருசலம் பிடிபடவில்லை. பிறகு, ரிச்சார்டு, சமாதானப் பேச்சைத் துவக்கினான். 1192ஆம் ஆண்டு செப்டம்பர் இரண்டாந்தேதி சமாதானம் ஏற்பட்டது - தற்காலிக உடன்பாடு - மூன்று வருஷம் மூன்று மாதத்துக்கு மட்டுமே அமலிலிருக்கும் விதமான சமாதானம்! இதன்படி, கிருஸ்தவர்கள், ஜெருசலத்துக்கு யாத்திரை வரலாம் என்று சாலாவுடீன் அவர்களுக்கு உரிமை அளித்தான்.

நான்காம் முறையாகப் புனிதப் போர் 1202இல் ஆரம்பமாயிற்று வெனீஸ் நகரில் கூடினர், போர்க்கோலத்துடன் - படை கிளம்பிற்று. கான்ஸ்டான்ட்டி நோபில் நகரைத் தாக்கித் தகர்த்து, அந்தப் பகுதியிலே, சில இடங்களைப் பிடித்தது மட்டுமே. கண்ட பலன். ஜெருசலம் பிறைக்கொடியாரிடமே இருந்தது.

1217இல் நடைபெற்ற ஐந்தாம் புனிதப்போருக்குத் தளபதியாக ஒரு ஹங்கேரிய வீரன் கிளம்பினான்-நைல் நதி தீரத்தில். சில இடங்களைப் பிடித்ததோடு அவன் ஆற்றல் முடிந்தது. ஜெருசலம் விடுவிக்கப்படவில்லை.

ஆறாம் புனிதப்போரை முன்னின்று நடத்தினார், ஜெர்மன் சக்ரவர்த்தி, அவர் போர் புரியாமலேயே சமாதானம் பேசி, பத்தாண்டுகளுக்கு ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திவிட்டு, வீடு திரும்பினார்.

பிரமாதமான ஏற்பாட்டுடன் கிளம்பினான் ஒன்பதாம் லூயி மன்னன், ஏழாம் புனிதப்போர் நடத்த. இந்த பிரான்சுப்பேரரசன், எகிப்து நாட்டிலே இஸ்லாமியரின் ஆதிக்கம் இனி என்றென்றும் இருக்க முடியாதபடி செய்துவிடுகிறேன் என்று சூளுரைத்துச் சென்றான். போரிலே தோல்வியே கண்டான். அதற்கு முன்பு நடைபெற்ற புனிதப் போரிலே, பெற்ற, இடங்களையும் இழந்து விட்டுத் திரும்பிவந்து சேர்ந்தான், 1254இல்.

எட்டாம் முறையும், லூயியே சென்றான் - பலன் இல்லை. புனிதப் போர்கள், இதுபோல, எட்டுமுறை நடைபெற்றதும், ஜெருசலம் கிட்டவில்ல. பிறகு பத்தொன்பதாண்டுகள், சிறுசிறு பிரிவினர், ஏதேதோ வகையான முயற்சிகள் செய்து பார்த்தனர். 'ஜெருசலம் கிடைக்கவில்லை. 1291இல் (ஈஜிப்ட்) எகிப்து சுல்தான் கிருஸ்தவரிடம் இருந்த ஏகர் எனும் கடைசி இடத்தையும் கைப்பற்றி விடவே, பாலஸ்தீன் பகுதியில், கிருஸ்தவ அரசு அமைக்கும் முயற்சி அடியோடு குலைந்தது.

1917இல் நடைபெற்ற ஜெர்மன் சண்டையின்போது, ஜெருசலம், பிரிட்டிஷாரால் பிடிக்கப்பட்டது. அது முதல் மே மாதம் 15ஆம் தேதி வரையில் பாலஸ்தீன், பிரிட்டிஷ் மேற்பார்வைக்குரிய ஆட்சியின்கீழ் இருந்து வந்தது. அந்த ஆட்சிக்காகக் குறித்திருந்த காலம் முடிந்து, பிரிட்டிஷார் வெளியேறியதும், புனிதப் போர்களின்போது இருந்த முழக்கம்போல், சிலுவையா, பிறையா என்பதல்ல இஸ்ரேலா? இஸ்லாமா? என்பது போர்முழக்கமாகி விட்டது.

புனிதப் போர்களுக்குப் பிறகு, ஐரோப்பிய நாட்டுக் கிருஸ்தவர்கள், ஜெருசலத்தின்மீது கொண்டிருந்த நாட்டத்தை விட்டுவிட்டனர்; ஆனால், யூதர்கள், தங்கள் மனதிலிருந்து ஜெருசலத்தை அகற்றிவிடவில்லை! அவர்கள், உலகிலே, எங்கே சுற்றிக்கொண்டிருந்தாலும். என்ன தொழிலைச் செய்து கொண்டிருந்தாலும், செல்வத்தில் புரண்டாலும் வறுமையில் வாடினாலும், அவர்களின் வாழ்க்கையின் குறிக்கோளாக; ஜெருசலத்தைத் திரும்பப் பெறுவது - பாலஸ்தீனை, யூதராஜ்யமாக்குவது, இஸ்ரேல் அரசு அமைப்பது என்பதுதான்.

யூதர்களின் வட்டித் தொழில், அவர்களைப் பிறர் வெறுக்கும்படி செய்தது. பலநாடுகளில், யூதர்களை, விரட்டவும் விலக்கவும் சட்டங்கள் இயற்றப்பட்டன. பல நகர்களில், யூதர்கள் வசிக்கும் பகுதிகள், தனிப்பெயரிடப்பட்டு, இழிவிடமாகக் கருதப் பிட்டது. உலகத்திலே, பலநாடுகளிலே இவ்வித வெறுப்புணர்ச்சி கிளம்பித் தாக்கிய காலத்திலும், யூதர்கள் தங்கள் மனதிலே. இஸ்ரேல் அரசை அமைத்துக்கொண்டு வந்தனர். பாலஸ்தீன். தங்களுடையது - எகிப்துப் பேரரசின் ஒரு பகுதி என்ற எண்ணம், அரபுகளுக்கு அசைக்கமுடியாதபடி ஏற்பட்டு விட்டது. யூதர்களின் மனோராஜ்யத்தைப்பற்றி, அரபுகள், பெரும்பாலானவர்கள் கேலியாகவே பேசினர் யூகமுள்ள சிலர் மட்டும், இது ஓர் எதிர்கால ஆபத்து என்று எடுத்துரைத்தனர்.

அடிக்கடி பாலஸ்தீனில், யூத-அரேபிய சச்சரவுகள் நடைபெறலாயின. மெல்ல மெல்ல யூதர்கள், பாலஸ்தீன் எமது பூர்வீகநாடு! எமக்கே அது சொந்தமாக வேண்டும்! எமது ஆட்சியே அங்கு இருக்க வேண்டும் என்று பேசவும், கிளர்ச்சி செய்யவுமாயினர். இது, நாளாவட்டத்தில் ஒரு இயக்கமாகவே உருவமெடுத்தது - **ஜியானிஸ்ட்டு இயக்கம்** என்பது அதன் பெயர். இதை, வெளிப்படை யாகத் தூண்டிவிடும் முறையிலேயே, பிரிட்டிஷார் நடந்து கொண்டனர்.

ஜெருசலத்தைப் பிடித்தபிறகு, 1917இல் பிரிட்டிஷ் சர்க்காரின் சார்பில், பால்பர் (Arthur Balfour அயலுறவுத் துறை அமைச்சராக இருந்தவர்) பேசுகையில், பாலஸ்தீனில், யூதர்களைக் குடியேறச் செய்து, அந்த நாட்டை, யூதர்களின் தாயகமாக்குவது, பிரிட்டிஷ் நோக்கம் என்று கூறினார். ஜியானிஸ்டு இயக்கம் இதன் பயனாய், புதிய நம்பிக்கையும் எழுச்சியும் பெற்றது. சர்வதேச சங்கத்தார். ஜெர்மன் சண்டை முடிந்தபிறகு, பாலஸ்தீனை, ஒரு ஒழுங்குமுறை ஏற்படும் வரை ஆட்சி செய்துவரும்படி, பிரிட்டனுக்கு அதிகாரம் அளித்தனர். பிரிட்டிஷார் அந்த அதிகாரத்தைத் தவறான காரியத்துக்குப் பயன்படுத்தினர் - பாலஸ்தீனை யூதரின் தாயகமாக்குவோம் என்று கூறியதன் மூலம் 1918இல், யூதர்களுக்கு, ஜெருசலத்தில் ஒரு கல்லூரி ஏற்படுத்தினர். உலகின் பல பகுதிகளில் இருந்துவந்த யூதர்கள், அந்தந்த நாடுகளில், தங்களுக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி, யூதராஜ்யத்தின், அவசியத்தை வலியுறுத்தினர்.

ஹிட்லரின் யூத ஒழிப்புத் திட்டத்தினால், உலக நற்கனவான்களின் அன்பும் ஆதரவும் யூதர்பக்கம் திரும்பிற்று. ஒரு பெரிய இனம் - பலப்பல நூற்றாண்டுகளாகப் பலவகையான கொடுமைகளைத் தாங்கிவரும் கூட்டம் - அதற்கென ஓர் தனிநாடு இல்லாமல் தவிப்பது கூடாது - ஆகவே, பாலஸ்தீனை, யூதர்களின் தாயகமாக்கத்தான் வேண்டும் என்ற பிரச்சாரம் பலப்பட்டது.

இன்று, நெடுங்காலமாக இருந்து வந்த யூதர்களின் மனோராஜ்யம், நிஜமாகவே உருவெடுத்து இஸ்ரேல் ராஜ்யம் என்று அமைக்கப்பட்டு விட்டது. அமெரிக்காவும் ரஷியாவும் அதனை அங்கீகரித்து விட்டன. சிலுவையா? பிறையா? என்ற பிரச்சினை மாறி, இன்று, அங்கு இஸ்லாமிய ராஜ்யமா? இஸ்ரேல் ராஜ்யமா? என்பது பிரச்சினையாகி விட்டது.

ஜெருசலம் இப்போது யூதர்களிடம் இருக்கிறது. அதன்மீது, எகிப்துநாட்டு விமானங்கள் வட்டமிடுகின்றன. இந்தச் சண்டை உலகப் பெரும் போராக வளர்ந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமே என்ற கவலை, பல வட்டாரங்களிலே ஏற்பட்டுவிட்டது. பாலஸ்தீனில் போர்! மூன்று நூற்றாண்டுகள், ஐரோப்பிய நாட்டவர் இரத்தம் கொட்டிக் கொட்டிப் பெறமுடியாமல் போய்விட்ட, ஜெருசலம், இனி யாருக்குச் சொந்தம், யூதருக்கா? அராபியருக்கா? என்பதைத் தீர்மானிக்கப் போர் மூண்டுவிட்டது. சமாதான தூதரின் சமாதி உள்ள புனிதபுரியிலே, சுமார் உலகின் நாலாபாகங்களிலும், "நாடோடிகள் போல் சுற்றித்திரிந்த யூதர்கள், இஸ்ரேல் ராஜ்யம் அமைத்து விட்டோம் என்று பெருமையுடன் கூறிக்கொண்டுள்ளனர். டிரான்ஸ்ஜோர்டன், ஈராக், சிரியா, லெபனான், எகிப்து ஆகிய நாட்டுப்படைகள் யூத அரசை எதிர்க்கின்றன. இந்தப் போரைத் தடுக்க, வல்லரசுகளும், ராஜ தந்திரிகளும், ஐக்கியநாடுகள் சபையும், பல்வேறு திட்டங்களைக் கொடுத்தனர் - பலன் ஏற்படவில்லை. பாலஸ்தீனை யூதர் பகுதி அரபு பகுதி என்று பிரித்து விடலாமே என்று 1936இல் பிரிட்டிஷார் ஒரு திட்டம் கூறினர் - ஏற்றுக் கொள்ளவில்லை எவரும்! எனவே போர். இந்தப்போர் உலகப்போராக மூண்டு விடக்கூடாதே என்பதற்காக, மீண்டும் ஏதேனும் சமரச முயற்சி செய்து பார்க்கலாம் என்று நாலுவார காலத்துக்குச் சண்டையை நிறுத்தி வைக்கும்படி, இருதரப்பினரையும், ஐக்கியநாடுகள் சபை கேட்டுக் கொண்டது. இணங்கினர். ஆனால் போர்க்கோலம் கலையவில்லை. பாலஸ்தீன் இதுவரையில் வாங்கிய பலி போதாதென்று, மீண்டும் 'பலி' கேட்கிறது! மீண்டும் இரத்த அபிஷேகம் நடக்கிறது. பாலஸ்தீனில்! ஆனால் அங்கு இருப்பதோ,


**க.திருநாவுக்கரசு**

திராவிட இயக்க ஆய்வாளர்




உலகில் சமாதானத்தை நிலைநாட்ட வந்த உத்தமர் ஏசுவின் சிலுவை!!"

அறிஞர் அண்ணாவின் இக்கட்டுரையைப் படிப்போருக்குக் கடந்த நூற்றாண்டுகளில் பாலஸ்தீனத்தில் என்ன நடந்தது என்பதையும் தற்போதைய நிலைகளையும் மேலே எடுத்துக்காட்டி இருக்கின்றோம். ஆனாலும் தற்போது பாலஸ்தீனம் பற்றிய தீர்வு எட்டுவதாகத் தெரியவில்லை. நடந்தவைகளில் இன்னும் சிலவற்றைப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்று ஹமாஸ் (Ammas) என்பது பாலஸ்தீனியரின் ஆயுதப் படை அமைப்பாகத் திகழ்ந்து வருகிறது. இந்த அமைப்பு காசாப்பகுதி உள்ளடக்கிய பாலஸ்தீனத்தை காப்பாற்றுவதற்காக அனைத்து நிலையிலும் செயல்பட்டு வருகின்ற ஓர் அமைப்பாக பயன்பட்டு வருகிறது. இந்த அமைப்புதான் பாலஸ்தீனத்தை நிர்வகித்து வருகிறது. பாலஸ்தீனத்தை உரிமைக் கொண்டாடுவதற்காக யூதர்கள் முன்மொழியும், போராட்டம் கிளர்ச்சி என்று நடத்தவும் 'ஜியானிஸ்ட்டு இயக்கம்' என நடத்தியது போல அதை விட பன்மடங்கு வீரியத்துடன் ஹமாஸ் அமைப்பைப் பாலஸ்தீனியர்கள் தோற்றுவித்தனர். பாலஸ்தீனியர்கள் அரேபியர்கள். ஹமாஸ் என்கிற சொல்லும் அரேபியச் சொல்தான். ஹமாஸ் என்றால் 'கிளர்ச்சி இயக்கம்' என்று பொருள். ஹமாஸ் காஸா பகுதியில் இயங்கும் ஆயுதப் படை, சமூகப் பணியாற்றக் கூடியவர்களும் இந்த இயக்கத்தில் பங்கேற்று இருக்கிறார்கள். இந்த இயக்கத்தை அழிப்பது அழித்தொழிப்பது என் முதல் பணி என்று இஸ்ரேல் பிரதமர் கூறி வருகிறார்.

காஸா, சோலன் குன்று, மேற்கு கரை என்கிற நிலப்பகுதிகள் எல்லாம் பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவைதான். இந்தப் பகுதிகள் யாவற்றையும் இஸ்ரேல் ஆக்கிரமித்து விட்டது. இது மட்டுமில்லை. 1967 முதல் ஜெருசலேமை இஸ்ரேல் கையகப்படுத்தி வைத்து இருக்கிறது. பாலஸ்தீனம், இஸ்ரேல் இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்றுதான் கோருகிறது. யாசர் அராபத் இருந்தபோது இதற்கான ஒப்பந்தத்தை நார்வேயில் போட்டாலும் அது இளைஞர்களின் எதிர்ப்புக்கு ஆளாயிற்று. இதனைக் கண்டு யாசர் அராபத் அதிர்ச்சி அடைந்தார்.

அரபு நிலபரப்பில் பாலஸ்தீனம், இஸ்ரேல் என்று இரு நாடுகள். இதில் இஸ்ரேலை அமெரிக்கா, அய்ரோப்பிய நாடுகள் அங்கீகரித்து விட்டன. அய்.நா. அங்கீகரித்து விட்டது. இஸ்ரேலை ஆரம்பத்தில் எதிர்த்த இந்தியா 1957இல் அங்கீகரித்து விட்டது. இச்சூழ்நிலையைக் கண்ட யாசர் அராபத் சுதந்திர பாலஸ்தீனத்தை உருவாக்க வேண்டும். அதற்கு உலக அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று கருதிய அராபத் அமைதி வழி பேச்சு வார்த்தைகளையும் ஒப்பந்தங்களும் தேவைப்படுகின்றன என்றார். அராபத்தின் இந்த அணுகுமுறையை ஏற்கும் சூழ்நிலையில் ஹமாஸ் இல்லை.

இருப்பினும் அராபத் உலகத் தலைவர்களைச் சந்தித்து சுதந்திர பாலஸ்தீனத்திற்கு ஆதரவைத் திரட்டினார். இரஷியா, கியூபா, இந்தியா போன்ற நாடுகள் பக்க பலமாக இருந்தன. யூதர்கள், கிறிஸ்தவர்கள், அரேபியர்கள் அனைவரும் சகோதரர்களாக வாழவே விரும்புகிறோம். அதற்கான பிரகடனங்களை முன் மொழிகிறோம். அமெரிக்கா இதற்கு எதிராக உள்ளது என்றார் அராபத். இன்றைய நிலையும் அப்படித்தான் இருக்கிறது. யாசர் அராபத்தின் இயக்கமான PLO (பாலஸ்தீன விடுதலை அமைப்பு) உடன் ஹமாஸ் முரண்படாமல் இருந்திருந்தால் உலக அரங்கில் பாலஸ்தீனத்தின் சுதந்திர வெற்றிக்கொடி என்றோ பறந்திருக்கும். இன்று அந்த நிலையெல்லாம் கடந்து வெகு தூரம் வந்தாகிவிட்டது. இஸ்ரேல் அமைந்த 77 ஆண்டுகளுக்குப் பிறகு - இப்போது பாலஸ்தீனத்தை 150 நாடுகளுக்கு மேல் ஆதரிக்கின்றன. இஸ்ரேல், பாலஸ்தீனம் என இரு நாடுகள் இருப்பதில் இந்த நாடுகளுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. வரலாற்று விசித்திரம் நம்மையெல்லாம் கண்ணை அகலத் திறந்து பார்க்க வைத்து இருக்கிறது.

எந்த பிரிட்டன் யூதர்களுக்காக இஸ்ரேலை உருவாக்கத் துணை நின்றதோ, அதே பிரிட்டன் இன்று பாலஸ்தீன நாட்டை அங்கீகரிக்க முன் வந்து இருக்கிறது. அதன் மூலம் அரபு மண்ணை எடுத்து இஸ்ரேல் ஆக்கியதை பிரிட்டன் ஒப்புக் கொள்கிறது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமன் நேதன்யாகுவை சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் போர்க்குற்றவாளியாக அறிவித்து இருக்கிறது. இந்த நிலையில் செப். 26 ஆம் தேதி அய். நா. பொதுச்சபையில் அவர் பேசினார். அவர் உரைக்கு எதிராக உலக நாடுகளின் பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்து இருக்கிறார்கள். நெதன்யாகு என்ன சொல்கிறார்? ஆக்கிரமித்த பகுதிகளை விட்டு வெளியேற மறுக்கிறார். ஹமாஸ் அமைப்பை அழிக்காமல் விடமாட்டேன் என்கிறார். பாலஸ்தீனத்தை 'நாடு' என ஒப்புக்கொள்ள மாட்டேன் என்கிறார். இதற்கு முடிவே இல்லாமல் இருக்கிறது.

இஸ்ரேலால் காஸா பகுதிகளில் கொல்லப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அய்.நா. பொதுச்செயலாளர் ஆண்டோனியோ குட்ரெஸ் சர்வதே இராணுவம் ஒன்று அமைக்கப் பட வேண்டும் என்று குரல் கொடுக்கிறார். இஸ்ரேலை மனத்தில் வைத்துக் கொண்டே இந்தக் கருத்தை அவர் கூறியிருக்கிறார். இதற்கு முன்பு இஸ்ரேல்பாலஸ்தீன் பற்றி பல ஒப்பந்தங்கள் போடப்பட்டன. 1978இல் கேம்டேவிட் ஒப்பந்தம், 1993இல் ஆஸ்லோ ஒப்பந்தம், 1994இல் ஜோர்டன் - இஸ்ரேல் ஒப்பந்தம், 2020இல் ஆபிரகாம் ஒப்பந்தம், குடிநீர் ஒப்பந்தம், காஸா அமைதிப் பேச்சு ஆகிய இவையெல்லாம் என்னவிதமான உள்ளடக்கத்தைப் பெற்றுத் திகழ்ந்தன என்பதை பின் வருமாறு வரிசைப்படுத்தலாம்.

- இஸ்ரேல் ஆக்கிரமித்த பாலஸ்தீன பகுதிகளிலிருந்து மெல்ல மெல்ல (Step by Step) வெளியேற வேண்டும்.
- இருதேச நிலப்பரப்பை அங்கீகரிக்க வேண்டும்.
- ஜெருசலம் புனித நகரம். இது உலகிற்குப் பொதுவானது. இதன்மீது யாரும் ஆதிக்கம் செய்யக்கூடாது.
- பாலஸ்தீன அரசினை ஏற்க வேண்டும்.
- பாலஸ்தீன சுதந்திர நாட்டை அங்கீகரிக்க வேண்டும்.

இப்படி உள்ளடக்கமுள்ள இந்த ஒப்பந்தங்கள் அனைத்தையும் இஸ்ரேல் மதிக்கவில்லை. மீறியது, இராணுவத்தை மட்டுமே இஸ்ரேல் நம்புகிறது. அது வலிமைமிக்கது. இஸ்ரேல் அமெரிக்கத் துணையோடு அணுகுண்டு தயாரிப்பதில் வெற்றி பெற்று இருக்கிறது. இஸ்ரேலின் எதேச்சதிகாரப் போக்கு அலகிட முடியாததாக இருக்கிறது. உலக நாடுகளை மதிக்க மறுக்கிறது.

இவையெல்லாம் ஒரு பக்கம் இருந்தாலும் இஸ்ரேல் கலங்கும்படி 'இண்டிபெட்டா' (Intifada) இயக்கம் - மக்கள் இயக்கம் செயல்படத் தொடங்கியது. மக்கள் இராணுவத்திற்கு எதிராகத் திரண்டு முழக்கமிடுவது 'இண்டிபெட்டா' இயக்கம், ஆக்கிரமிப்பை நிறுத்தி வெளியேறினால் அந்த மக்கள் இயக்கத்தை நிறுத்துகிறோம் என்று கூறியது பாலஸ்தீனம். இந்தப் போராட்டத்திற்கு இஸ்ரேல் அச்சம் கொண்டது.

இஸ்ரேல் இராணுவம் அமெரிக்கா, ரஷியாவை விஞ்சக்கூடியது. இது ஒரு பிரச்சாரமாக கூட இருக்கலாம். இந்த பிம்பத்தை, பிரச்சாரத்தை ஹமாஸ் உடைத்தெறிந்தது. இவர்களிடம் கப்பல் படையோ விமானப் படையோ இல்லை. ஆனால் ஹமாஸ் இஸ்ரேலைத் தாக்கியது. இஸ்ரேல் இராணுவ கண்காணிப்புகளை ஹமாஸ் தகர்த்தது. உயர் இராணுவ தொழில் நுட்பம் அறியாமல் இது சாத்தியமில்லை. இதனால் இஸ்ரேலின் இராணுவ பிம்பம் தகர்க்கப் பட்டது. இஸ்ரேலுக்கு இது அவமானமாயிற்று. தகர்ப்பு பணியை ஒரு நொடியில் செய்தது ஹமாஸ், இஸ்ரேலின் கோபம் உச்சிக்கு ஏறிற்று.

இவையெல்லாம் பாலஸ்தீனத்தின் பலமாக வளர்ந்து வருகிறது. சர்வதேச நாடுகள் அங்கீகரிக்கத் தொடங்கிவிட்டன. செப்.29 ஆம் தேதி (2025) ஏடுகளில் அமெரிக்கா 20 அம்சம் கொண்ட திட்டத்தை அறிவித்து இருக்கிறது. இஸ்ரேல் - ஹமாஸ் போர் நிறுத்தத்திற்கானவை என்கிறது அமெரிக்கா. அதில் பாலஸ்தீன அங்கீகாரத்தைப் பற்றி ஒன்றும் இல்லை. இஸ்ரேல் ஆதரவு நிலையே தெரிகிறது. பிரதமர் மோடி இந்தத் திட்டத்தை வரவேற்கிறார், பிரதமர் மோடி பாலஸ்தீனம் பற்றி உலக நாடுகளின் ஆதரவை கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை; எனினும் இப்போதைய நிலைமை என்ன என்பதை நாம் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

- உலக நாடுகள் - பெரும்பாலானவை பாலஸ்தீனத்திற்கு ஒப்புதல் - அங்கீகாரம் வழங்கிவிட்டன. பாலஸ்தீனம் ஒரு நாடு என்று ஆகிவிட்ட பிறகு இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பகுதிகளை விட்டு வெளியேற வேண்டும். அதற்கு உலக நாடுகள் கூடிப் பேச வேண்டும். முடிவு எடுத்து நடைமுறைப் படுத்த வேண்டும்.
- இஸ்ரேல் ஒரு நாடு என்பது போல பாலஸ்தீனத்தையும் இஸ்ரேல் அங்கீகரிக்க வேண்டும். அதற்கான முழுச் சுதந்திரத்தோடு இயங்கச் செய்ய வேண்டும்.
- இஸ்ரேலின் தலைநகரம் ஜெருசலம் என்று அமெரிக்கா அங்கீகாரம் செய்துள்ளது. இந்த அங்கீகாரத்தை அமெரிக்கா திரும்பப் பெற வேண்டும்.
- ஜெருசலம் அனைத்து மதத்தினருக்கும் அதாவது யூத, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதத்தினரும் பொது நகரமாக கருதப்பட வேண்டும்.

இத் திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்த உலக நாடுகள் முன்வர வேண்டும். இதுதான் உடனடி நடவடிக்கையாகவும் நிரந்தரபரிகாரமாகவும் பாலஸ்தீனத் தீர்வுக்கு வழி வகுக்க உதவும் என்று நாம் நம்புகின்றோம். இல்லையென்றால் இப்பிரச்சினை கார் உள்ள அளவும் கடல் உள்ள அளவும் தீர்வை எட்டுவதற்கு வாய்ப்பில்லை. ●



நெல்லை மாவட்டம் பணகுடிலெப்பை குடியிருப்பு கிராமத்திற்கு செல்ல ரயில்வே பாதை சுரங்கப்பாதையாக அமைக்கப்பட்டுள்ளது. அதனை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, பணகுடி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி தமிழ்வாணன், நகர செயலாளர் தமிழ்வாணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாந்தி உள்பட பலர் உள்ளனர்.

## நெல்லை மாவட்டம்

# பணகுடிலெப்பை குடியிருப்பு செல்ல ரயில்வே சுரங்கப்பாதை!

## சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை. அக்.6

நெல்லைமாவட்டம் பணகுடி அருகே உள்ள லெப்பை குடியிருப்பு கிராமத்திற்கு செல்லும் ரெயில்வே பாதை சுரங்கப்பாதையாக அமைக்கப்பட்டுள்ளது. அதனை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்து பொதுமக்களுக்கு அர்ப்பணித்தார்.

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பொது மக்களின் கோரிக்கையை ஏற்று நெல்லை மாவட்டம் பணகுடி லெப்பை குடியிருப்பு இடையே ரயில்வே பாதையை சுரங்கப்பாதையாக அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொண்டார் .அதன்படி ஒருவருடமாக பணி நடந்து வந்த நிலையில் சட்ட பேரவை தலைவர் அவர்களின் தொடர் முயற்சியால் விரைவாக பணிகள் நடைபெற்றது. மழை தண்ணீருக்கு தானியங்கி முறையில் தண்ணீர் வெளியேற வழி செய்யப்பட்டு உள்ளது.

**இப்பணிகள் முடிவுற்ற நிலையில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு**

ரயில்வே சுரங்கப் பாதையை துவக்கி வைத்து பொதுமக்களுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர், சாந்தி, நெல்லை கிழக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு,பணகுடி பேரூராட்சி தலைவர் தனலட்சுமி தமிழ்வாணன், ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் தாய்செல்வி,கோசிஜின், காவல்கிணறு ஊராட்சி தலைவர் இந்திரா சம்பு, சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் அழகேசன், மாவட்ட விவசாய பிரிவு துணை அமைப்பாளர் தம்பிராஜ், பணகுடி நகரச் செயலாளர் தமிழ்வாணன், பேரூராட்சி துணை தலைவர் புஷ்பராஜ், அரங்கவல்குழுத் தலைவர் இசக்கியப்பன், முன்னாள் துணை தலைவர் சங்கர், கழக பிரமுகர் மாணிக்கம், கிளை செயலாளர் இளங்கோவன், கவுன்சிலர்கள் கோபி கோபால கண்ணன், சொரிமுத்து, ஆசா, ஜெயராம், அசோகன், முத்துக்குமார், தி.மு.க. தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் சுதாகர், வைகுண்ட ராஜா, செல்வின், நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் விஷ்ணு குமார், மின்வாரிய செயற்பொறியாளர் ஜெகதீஸ் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.